தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
ஆவணி 28, விசு - திருவள்ளுவர் ஆண்டு 2032
2001, செப்டம்பர் 13, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்

தாழாது உஞற்று பவர்க்கு"

தம் குடி உயர்வதற்கான செயலை விரைந்து முயன்று செய்பவர்க்கு அச்செயல் தாமாகவே நிறைவேறிவிடும்.

1. வினாக்கள் - விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா எண் 85,* திருமதி கே. பவானி கருணாகரன், *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.*

85—

உபகரணங்கள்

***961—திருமதி கே. பவானி கருணாகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் அரசினர் மருத்துவமனையில் ரோட்டரி சங்கம் சார்பில் கட்டித்தரப்பட்டுள்ள இரத்த சேமிப்பு வங்கிக்குத் தேவையான உபகரணங்கள் வழங்க விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரக்கோணம் அரசு மருத்துவமனையிலுள்ள இரத்த வங்கிக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டுவிட்டன.

(ஆ) இக்கேள்விக்குப் பதில் எழவில்லை.

திருமதி கே. பவானி கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழங்கப்பட்டுவிட்டன என்று மாண்புமிகு அமைச்சர் கூறியவுடனே எனக்கு மிகவும் சந்தோஷம். மிக்க நன்றி என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 86, திரு. இரா.தா. இன்பத் தமிழன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

86—

குடிநீர்

***1158—திரு. இரா.தா. இன்பத் தமிழன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழக்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் கிராமப்புறங்களிலுள்ள குடிதண்ணீர்ப் பிரச்சினையைக் களைய அடிபம்புகள் அமைக்கவும், குடிநீர் சீரிய முறையில் கிடைக்கவும் அரசு உடனே ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இன்பத் தமிழன் இருக்கையில் இல்லை. வினா எண் 87, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS